# புதுச்சேரி அரசு
# துணை ஆணையர் (கலால்) அலுவலகம்
# புதுச்சேரி

***

எண்: துஆ(க)/ க.ஏ /2011-12 தேதி: 23.10.2015

## ஏல அறிவிப்பு

இதனால் அறிவிக்கப்படுவது என்னவென்றால் கடந்த 2011-12 குத்தகையாண்டில் சாராய மற்றும் கள்ளுக்கடை நடத்தி நிலுவையில் உள்ள கிஸ்தி பாக்கித்தொகையினை வசூல் செய்யும் பொருட்டு குத்தகைதாரர் மற்றும் ஜாமீன்தாரர்கள் ஜாமீனாக கொடுத்துள்ள அசையா சொத்துக்கள் (நிலம் மற்றும் வீடு) கலால் துறையினால் புதுச்சேரி வருவாய் வசூல் சட்டம் 1970-ன் கீழ் ஜப்தி செய்யப்பட்டுள்ளன. இச்சொத்துக்கள் 2015- ம் ஆண்டு நவம்பர் மாதம் 26, 27 மற்றும் 30 தேதிகளில் இணையதளம் மூலம் நடைபெறும் பொது ஏலத்தில் அதிக தொகைக்கு ஏலம் எடுப்போருக்கு விற்கப்பட்டுப் பாக்கித்தொகை வசூல் செய்யப்பட உள்ளது.

2. மேற்குறிப்பிட்ட ஏலம் www.eauction.gov.in என்ற இணையதளம் மூலம் "உள்ளது உள்ளபடி" (as is where is basis) நடைபெறும். இந்த ஏலத்தில் கலந்துக்கொள்ள விரும்புவோர் விற்பனைக்கு நிர்ணயிக்கப்பட்டத்தொகையில் **15 சதவீதத் தொகையை** பிணையத்தொகையாகக் (EMD) நேரடியாகவோ அல்லது தபால் மூலம் பணவரைவாகவோ (Demand Draft) கட்ட வேண்டும். பாக்கிக் கிரயத் தொகையை விற்பனை நடந்த தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்ததவறினால் பிணையத்தொகையை இழந்துவிடுவார்கள்.

3. இந்த ஏலத்தில் கலந்துக்கொள்ள விரும்பும் அனைவரும் "**மின்னணு கையெழுத்துச் சான்றிதழ்**" (Digital Signature Certificate) கட்டாயம் பெற்றிருக்க வேண்டும்.

4. மேற்படி நிலங்களின் விவரத்திலோ அவைகளின் உத்தேச விஸ்தீர்ணத்திலோ பிழைகள் இருந்தால் அதற்குக் கவர்மெண்டார் உத்தரவாதியாகமாட்டார்கள் என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

5. கலெக்டரோ அல்லது இது விஷயமாய் அதிகாரம் கொடுக்கப்பெற்றிருக்கும் அதிகாரியோ விற்பனையை ஊர்ஜிதப்படுத்துகிறவரையில் அது முடிவானதாகாது.

6. மேலும், ஏலத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ள அசையா சொத்துக்களின் விவரம், ஏலம் எடுத்தவர்கள் கலால் துறைக்குக் கட்டவேண்டிய நிலுவைத்தொகை, ஏலத்தில் கலந்துக்கொள்வோர் கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள், மற்றும் பிணையத்தொகை, போன்றத் தகவல்களை "www.eauction.gov.in" மற்றும்"exciseportal.py.gov.in"என்ற இணையதளம் மூலம் அறியலாம்.

இவண்,

துணை ஆணையர் (கலால்)
புதுச்சேரி